செ.வெ.எண். 247 நாள்: 11.04.11

<u>செய்தி வெளியீடு</u>

சில வாக்காளர் சீட்டுக்கள் / வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகளில் பொருந்தாத புகைப்படங்கள் இடம்பெற்றுள்ள சில நேர்வுகள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

2. இது தொடர்பாக பின்வரும் விளக்கம் அளிக்கப்படுகின்றது. வாக்காளர் சீட்டுக்களில் புகைப்படம் இடம் பெறாமல் இருத்தல், வாக்காளர் சீட்டுக்கள் / வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகளில் விவரங்களில் தவறு இருத்தல் அல்லது பொருந்தாத புகைப்படம் இடம்பெற்றிருத்தல் ஆகிய நேர்வுகளிலும் கூட, இந்திய தேர்தல் ஆணையத்தால் அடையாளம் காண்பதற்கென அனுமதிக்கப்பட்டுள்ள மாற்று ஆவணங்களின் அடிப்படையில் வாக்காளர் வாக்களிக்க அனுமதிக்கப்படுவார். எனினும் மாற்று அடையாள ஆவணத்துடன், தமக்கு வழங்கப்பட்டுள்ள வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை / வாக்காளர் சீட்டு ஆகியவற்றை வாக்காளர் வாக்குச்சாவடிக்கு கொண்டு வர வேண்டும்.

தலைமைத் தேர்தல் அதிகாரி
தமிழ் நாடு

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9